உ

கடவுள் துணை.

குள்ளத்தாரா சிந்து.



சென்னை-குயப்பேட்டை
பி. நா சிதம்பரமுதலியார் அவர்களது
வித்யாரத்நாகர அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1921

மயிர்வளரும் பரிமளத் தைலம்.

இந்த எண்ணெயிலிருக்கும் பரிமளமானது மஞ்ஞோரஞ்சித மலரைப்போல பலவித வாசனையைக் கொடுக்கும். சில வாசனை எண்ணெய்கள் கூந்தலில் தடவிக்கொண்ட சற்று நேரத்திலேயே மாறிவிடுவதுண்டு. இந்த எண்ணெயை கூந்தலுக்கு தடவிக் கொண்டு உங்கள் வழக்கப்படி எத்தனைநாள்பொறுத்து தலைமுழுகினபோதிலும் இதன் பரிமளத்தைப் பார்க்கலாம்.

ஒரு டப்பியின் விலை ரூபா—1.

என்னுடைய பெரிய கேட்லாக் வேண்டுமானால் அரையணு தபால் ஸ்டாம்பு அனுப்பினுல் அனுப்பப்படும்.

இப்படிக்கு,

பி. நா. சிதம்பரமுதலியார்,

பிரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு, மதராஸ்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

குள்ளத்தாரா சிந்து.

விநாயகர் - வணக்கம்.

விருத்தம்.

சிந்துகுமுலகிலுள்ளோர் திரெள்பலங்கொள்ள
வேண்டி, விந்தைசேர்மனதுக்கோதும் வியன்மதிமா
லைதன்னை, கர்தமார்சிந்தாய்கூறக் கரிமுகனுபயபொற்
பூங்,கொந்தலர்க்கழலைநாளுங்கூப்பியேபணிகுவாமால்

நூன்முகம்.

சிந்து-கண்ணிகள்.

சித்திவிநாயகனை ஏ-குள்ளத்தாராநீ
சிந்தைதனிலேவகிப்பாய் ஏ-குள்ளத்தாரா
ஏகுலிக்கி தில்லாலேநீ முன்னாலே நான்பின்னாலே
சிந்தைதனிலேவகிப்பாய் ஏ-குள்ளத்தாரா 1

பாடலீசன்பொற்பதத்தை ஏ-குள்ளத்தாராநீ
பக்தியுடன்போற்றிசெய்வாய் ஏ-குள்ளத்தாராநீ 2

பேர்பெரியநாயகியை ஏ-குள்ளத்தாராநீ
வெற்றியுடன்போற்றிசெய்வாய் ஏ-குள்ளத்தாரா 3

வேலவனைப்போற்றிடுவாய் குள்ளத்தாராநின்
வினைகளகன்றிடுவாய் குள்ளத்தாரா 4

வள்ளிதெய்வானைபதம் குள்ளத்தாராநீ
வண்மையுடன்போற்றிசெய்வாய் குள்ளத்தாரா 5

ஆதிமூலப்பொருளை குள்ளத்தாராநீ
யன்புடனேபோற்றிசெய்வாய் குள்ளத்தாரா 6

செந்திருவின்பொற்பதத்தைக் குள்ளத்தாராநின்
சிந்தையிலிருத்திடுவாய் குள்ளத்தாரா 7

தாயார்சரஸ்வதியை குள்ளத்தாரா நீ
சந்ததமும்போற்றிசெய்வாய் குள்ளத்தாரா 8

ஆருயிர்க்குருதுணையாங் குள்ளத்தாரா-என
தன்பின்வழியேநடக்கிற குள்ளத்தாரா 9

சந்த்ரகாந்தமேடையுண்டு குள்ளத்தாரா வதைச்
சாரவும்பொன்னேணியுண்டு குள்ளத்தாரா 10

பன்னிருகால்வாசியுண்டு குள்ளத்தாரா-வதைப்
பற்றப்பரிசுத்தனுண்டு குள்ளத்தாரா 11

சோமவட்டமாம்பதியிற்குள்ளத்தாராநீ
சுகித்தமுர்தமுண்டிருப்பாய் குள்ளத்தாரா 12

எமனடறுவானோ குள்ளத்தாராநீ
என்வழிநடப்பையாகில் குள்ளத்தாரா 13

இந்திரப்பட்டமும்பெறுவாய் குள்ளத்தாரா-சொல்
இருவினையகன்றிடுவாய் குள்ளத்தாரா 14

கட்டிலுண்டுமெத்தையுண்டு குள்ளத்தாரா-நாம்
கலந்துசுகிக்கலாமே குள்ளத்தாரா 15

தலையிலணிந்துகொள்ளக் குள்ளத்தாரா-ரத்ன
சடையில்லைதானுமுண்டு குள்ளத்தாரா 16

சடைநாகந்தானுமுண்டு குள்ளத்தாரா-வதைச்
சார்ந்தகுச்சுகுப்பியுண்டு குள்ளத்தாரா 17

காதிலணிந்துகொள்ளக் குள்ளத்தாரா-நல்ல
கம்மல்சிமிக்கியுண்டு குள்ளத்தாரா 18

கொப்புமுருகுமுண்டு குள்ளத்தாரா-நற்
கொந்தளப்பொன்னோலையுண்டு குள்ளத்தாரா 19

கத்திரிப்பாவலுடனே குள்ளத்தாரா-நல்ல
கனத்தசம்புலுமுண்டு குள்ளத்தாரா 20

நத்துமுக்குத்தியுண்டு குள்ளத்தாரா நீ
நாணயமாய்பூட்டிக்கொள்ள குள்ளத்தாரா 21

கழுத்திலணிந்துக்கொள்ள குள்ளத்தாரா-உயர்
தண்டசாமாலையுண்டு குள்ளத்தாரா 22

கைக்குத்தங்கக்காப்புமுண்டு குள்ளத்தாரா
கனத்தகொலுசுமுண்டு குள்ளத்தாரா 23

இடையிலணிந்துகொள்ள குள்ளத்தாரா
இசைந்தஒட்டியாணமுண்டு குள்ளத்தாரா 24

பாதசரந்தண்டையுண்டு குள்ளத்தாராநீ
பண்புடனணிந்துகொள்ளக் குள்ளத்தாரா 25

விரலிற்றரிந்திடவுங் குள்ளத்தாரா-வெகு
விந்தைமோதிரங்களுண்டு குள்ளத்தாரா 26

இமையாயிரம்பொன்பெற்ற குள்ளத்தாரா-உனக்
கிந்திரவர்னச்சேலையுண்டு குள்ளத்தாரா 27

சரிகைரவிக்கையுண்டு குள்ளத்தாரா-திகழ்
தங்கவங்கிபில்லையுண்டு குள்ளத்தாரா 28

பத்துலட்சம்விலையுள்ள குள்ளத்தாரா-உயர்
பங்களாக்கள்தானுமுண்டு குள்ளத்தாரா 29

தங்கத்தாலேகிண்ணியுண்டு குள்ளத்தாரா-நீ
சாதமருந்திடவே குள்ளத்தாரா 30

வெள்ளிப்பாத்திரங்களுண்டு குள்ளத்தாரா-நீ
வேணதையனுபவிப்பாய் குள்ளத்தாரா 31

கைபிடிக்கக்கால்பிடிக்கக் குள்ளத்தாரா-சொலுங்
கனத்ததோழிகளுண்டு குள்ளத்தாரா 32

ஏரிச்சவாரிசெய்யக் குள்ளத்தாரா-உனக்
கிசைந்தபல்லாக்குமுண்டு குள்ளத்தாரா 33

தந்தநாற்புண்டு குள்ளத்தாரா-நீ
சார்ந்துகொண்டிருப்பதற்குக் குள்ளத்தாரா 34

சோபாக்கள்தானுமுண்டு குள்ளத்தாரா-என்
சுந்தரியேநீயிருக்கக் குள்ளத்தாரா 35

பொன்னுஞ்சப்பலகையுண்டு குள்ளத்தாரா-என்
பொற்கொடியேயாடுதற்கு குள்ளத்தாரா 36

நன்னயமாய்பேசுதற்கு குள்ளத்தாரா-நல்ல
நாத்திமாரனேகருண்டு குள்ளத்தாரா 37

மாமியுண்டுமாமனுண்டு குள்ளத்தாரா
மைத்துனாரனேகருண்டு குள்ளத்தாரா 38

சந்துமுண்டுபொந்துமுண்டு குள்ளத்தாரா
ஜாடைசெய்துகூப்பிடவுங் குள்ளத்தாரா 39

தென்னமரச்சோலையுண்டு குள்ளத்தாரா-நீ
சிந்தைகளித்தாடவாடி குள்ளத்தாரா 40

பாக்குமரச்சாலையுண்டு குள்ளத்தாரா-நீ
பந்துவிளையாடவாடி குள்ளத்தாரா 41

கற்பகத்தருவுமுண்டு குள்ளத்தாரா-நீ
கருதியதெல்லாந்தாக் குள்ளத்தாரா 42

கெடிலநதியுமுண்டு குள்ளத்தாரா-வதின்
கிளர்கடுக்காலுமுண்டு குள்ளத்தாரா 43

உன்னைநம்பிநானிருந்தால் குள்ளத்தாரா-இந்த
வுலகம்பொருக்கலையே குள்ளத்தாரா 44

அந்தமுள்ளமாதரசே குள்ளத்தாரா
யன்புடனருகில்வாராய் குள்ளத்தாரா 45

கிள்ளைநேர்மொழியினளே குள்ளத்தாரா-நீ
கிருபைசெய்துவாராயோடி குள்ளத்தாரா 46
மயில்போலுஞ்சாயலாளே குள்ளத்தாரா-என்
மனதுமுருகாதோடி குள்ளத்தாரா 47
அன்னநடைமாதேயடி குள்ளத்தாரா-உன்
னகமுமிரங்காதோடி குள்ளத்தாரா 48
அடைக்காயும்வெள்ளிலையுங் குள்ளத்தாரா வெனக்
கருந்தவரிவாயோடி குள்ளத்தாரா 49
வாசனைதிரவியங்கள் குள்ளத்தாராநீ
வகைவகையாய்ப்பூசிக்கொள்வாய் குள்ளத்தாரா 50
சண்பகமலர்நிதமும் குள்ளத்தாரா-நீ
சம்பிரமமாய்முடித்துக்கொள்வாய் குள்ளத்தாரா 51
பாடலீசன்பொற்பதத்தைக் குள்ளத்தயா-நீ
பத்தியுடன்சேவைசெய்வாய் குள்ளத்தாரா 52
பாலும்நீறும்போலவடி குள்ளத்தாரா-நாம்
பண்புடனேவாழ்ந்திருப்போம் குள்ளத்தாரா 53
மங்களமாய்வாழ்ந்திருப்பாய் குள்ளத்தாரா-இந்த
வையகமுள்ளளவுமடி குள்ளத்தாரா. 54

குள்ளத்தாராசிந்து

முற்றிற்று.